# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● செப்டம்பர் 14, 2024

Weekly E-paper ● September 14, 2024




## பாசிசத்தின் மறுபெயர் பார்ப்பனியம்!

● இர்சாத் அகமது ● செல்வம் முடியரசன்

### பள்ளிக் கூடத்தில் நேரம் ஒதுக்கிப் பகுத்தறிவைச் சொல்ல வேண்டும் !

எழில்.இளங்கோவன்

### காஷ்மீர் தேர்தல்

தலையங்கம்

### பேரவைச் செய்திகள்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● செப்டம்பர் 14, 2024 Weekly E-paper ● September 14, 2024


# பாசிசத்தின் மறுபெயர் பார்ப்பனியம்!

● இர்சாத் அகமது ● செல்வம் முடியரசன்





அன்னபூர்ணா ஹோட்டல் உரிமையாளர் பாஜகவுக்கு எதிரானவர் அல்ல.

திராவிட இயக்கத்திலோ, கம்யூனிஸ்ட் கட்சியிலோ, காங்கிரசிலோ கூட அவர் இல்லை. வியாபாரத்தை நேர்த்தியாகச் செய்யக் கூடியவர்.

வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்.

பாஜக பரிவாரங்களுக்கு நண்பராக இருப்பவர். அதனால்தான் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் நடத்திய கூட்டத்தில் பங்கேற்க அனுமதிக்கப்பட்டார். அவர் GST வேண்டாம் என்று சொல்லவில்லை. GST வரிவிதிப்பு குழப்பம் இல்லாமல் இருந்தால் போதும் என்று மட்டும் தான் கோரிக்கை வைத்தார்.

அதுவும் மேடையில் இருந்த சட்டமன்ற உறுப்பினரைச் சாட்சியமாக்கி, நடைமுறை அனுபவத்துடன் விளக்கினார். அதைக் கூட பொறுத்துக் கொள்ள முடியாமல், அதிகாரத் திமிரை ஆணவத்துடன் வெளிப்படுத்தி இருக்கிறார் ஒன்றிய நிதி அமைச்சர்.

இந்த நேரத்தில், வரலாற்று நிகழ்வு ஒன்றை நினைவு படுத்த வேண்டிய தேவை உள்ளது.

' பிராமணாள் கபே' 'பிராமணாள் ஹோட்டல்' பெயர்ப் பலகைகளை நீக்கச் சொல்லி பெரியார் முன்னெடுத்த போராட்டத்தின் முக்கியக் களமாக இருந்தது திருவல்லிக்கேணி பாரதி சாலை (பைகிராப்ட்ஸ் ரோடு) முரளி கபே.

முரளி பிராமணாள் கபே என்றிருந்ததை 1956 மே மாதம் முதல் 1957 மார்ச் வரை தொடர்ச்சியானப் போராட்டம் நடத்தியும், திராவிடர் கழகத் தொண்டர்கள் தினமும் பத்துப் பத்துப் பேராகக் கைதாகி சிறை சென்றும், ஹோட்டல் மாடியிலிருந்து கொட்டப்பட்ட வெந்நீரால் போராட்டக்காரர்கள் துன்பப்பட்டும், நீண்ட போராட்டத்துக்குப் பின் 'பிராமணாள்' நீக்கப்பட்டு, முரளி 'ஐடியல்' கபே ஆனது. சிந்தாதிரிப்பேட்டையில் பெரியாரை இரவு நேரத்தில் சந்தித்த ஹோட்டல் முதலாளி தன் ஹோட்டல் நிர்வாகத்தின் செயலுக்கு வருத்தம் தெரிவித்து மன்னிப்புக் கோரினார்.

அப்போதெல்லாம் இப்படி முதுகுக்குப் பின்னே செல்போன் கேமராவால் வீடியோ எடுக்கும் வசதிகள் கிடையாது. அதிகபட்சம் புகைப்படம் எடுக்கலாம். ஆனாலும் பெரியார் இதற்கு அனுமதிக்கவில்லை.

முரளி கஃபே முதலாளி தன்னை வந்து சந்தித்து மன்னிப்புக் கேட்டதைக்கூட "விடுதலை" நாளிதழில் செய்தியாக வெளியிடக் கூடாது என்றும் கறாராக உத்தரவிட்டார்.

அவர் தான் பெரியார்*

அதனால் தான் பெரியார்*

●

## காலமானார் சீத்தாராம் யெச்சூரி



மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சீத்தாராம் யெச்சூரி 12-09-2024 அன்று, தன் 72ஆம் வயதில் எய்ம்ஸ் மருத்துவ மனையில் சிகிச்சை பலனின்றி காலமானார். பொதுவுடைமைக் கொள்கையில் உறுதியான பிடிப்பும், சிறந்த அரசியல் தலைவர்களுள் ஒருவருமான அவர் மறைவுக்குத் திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பாக ஆழ்ந்த அஞ்சலினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# பள்ளிக் கூடத்தில் நேரம் ஒதுக்கிப் பகுத்தறிவைச் சொல்ல வேண்டும் !

எழில்.இளங்கோவன்

"ஒருமந்திரம்சொன்னால்நெருப்பு மழை கொட்டும். இன்னொரு மந்திரம் சொன்னால் வானத்தில் பறக்கலாம்..." என்று உளறிக் கொட்டிய மூட நம்பிக்கையால் ஒரு மகாவிஷ்ணு இன்று இங்கே கம்பிகளுக்குப் பின்னால் புலம்பிக் கொண்டு இருப்பதாகத் தெரிகிறது.



இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கர்நாடகாவில் எட்டாம் வகுப்புப் பாடப் புத்தகத்தில் "சாவர்க்கர் அந்தமான் சிறையில் அடைக்கப்பட்ட அறையில், ஒரு சிறிய சாவித் துவாரம் கூட இல்லை. இருப்பினும், புல்புல் பறவை ஒன்று எங்கிருந்தோ அறைக்கு வரும். சாவர்க்கர் ஒவ்வொரு நாளும் தாய்நாட்டிற்கு (இந்தியா) அந்தப் பறவையின் இறக்கைகளில் அமர்ந்து பறந்து வந்து செல்வார்," என்று இடம்பெற்றிருந்த பகுத்தறிவிற்கு ஒவ்வாதபகுதி அங்கே சர்ச்சையைக் கிளப்பிவிட்டது.

மகாபாரதத்தில் கர்ணன் தாயின் கருவில் இருந்து பிறக்கவில்லை, மாறாக அந்தப் புராண காலத்திலேயே மரபணு விஞ்ஞானத்தின் மூலம் பிறந்ததாகவும்,

அதேபோல விநாயகன் தலையில் யானையைப் பொருத்தி இருப்பது அந்தக் காலத்தில் பிளாஸ்டிக் சர்ஜரி இருந்துள்ளதை உறுதிசெய்கிறது என்றும் அடித்து விட்டிருக்கிறார் பிரதமர் மோடி 2014ஆம் ஆண்டில்.

இப்பொழுது ஒருவர் கிளம்பியிருக்கிறார், பெயர் இந்தர்சிங் பர்மர். மத்தியப் பிரதேச மாநிலக் கல்வி அமைச்சர் அவர். பர்கத்துல்லா பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவின் போது மாணவர்களிடம் "அமெரிக்காவைக் கண்டுபிடித்தவர் கொலம்பஸ் இல்லை, நமது முன்னோர்கள். அதுவும் 8 ஆம் நூற்றாண்டில் ஒரு இந்திய மாலுமி அங்கே போய் சாண்டியாகோவில் பல கோயில்களைக் கட்டிவிட்டான்" என்று பேசியிருக்கிறார். அப்படியானால் 8ஆம் நூற்றாண்டு என்பது கி.முவா? கி.பியா? அந்த மாலுமியின் பெயர் என்ன? ஒருவேளை அவரைத்தான் 'கொலம்பஸ்' என்கிறாரோ நம்ம ம.பி. அமைச்சர்?

அடுத்த போடு இப்படிப் போடுகிறார் அந்தக் கல்வி அமைச்சர். " ராமர் சிலைகளை உருவாக்கிய பால்பாகு என்ற இந்தியக் கட்டிடக் கலைஞரின் உதவியுடன் பெய்ஜிங் நகரம் வடிவமைக்கப் பட்டது", இது அவரின் வாக்குமூலம்

அப்படியானால் ராமர் சிலைகளைச் சிற்பிகள் உருவாக்கவில்லை, மாறாகக் கட்டிடத் தொழிலாளர்கள்தாம் உருவாக்கினார்களா?

இன்றைய பெய்ஜிங் நகரம் அன்று பீக்கிங் என்று அழைக்கப் பட்டது. சீனாவின் வரலாறு தெரியாத 'ஞானசூன்யம்' என்பதற்கு இவரைத் தவிர வேறு சான்று எதுவும் தேவையில்லை.

"பூமி சூரியனைச் சுற்றிவருகிறது என்று முதலில் கணித்தவர்கள் ரிக்வேதத்தை எழுதியவர்கள் தான் " என்று கதையை முடித்து விட்டார் அந்த ம.பி. மந்திரி. இங்கே ஒரு கேள்வி எழுகிறது. பூமி சூரியனைச் சுற்றிவருவதாக ரிக்வேதத்தில் எந்த மண்டலத்தில், எந்த சூக்தத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது என்பதையும் அவர்தான் சொல்ல வேண்டும். உண்மையில் இப்படி ஒரு செய்தி அந்த வேதத்தில் சொல்லப்படவே இல்லை.

பூமி உட்பட அனைத்துக் கோள்களுமே சூரியனைச் சுற்றித்தான் வலம் வருகின்றன என்று அறிவியல் அடிப்படையில் ஒரு வலுவான கோட்பாட்டை முன்வைத்தவர் நிக்கோலஸ் கோப்பர்நிகஸ். அதைத் தனது தொலைநோக்கி மூலமாக வானியலை ஆராய்ந்து உண்மையென நிறுவியவர் கலிலியோ.

காவிகள் அறிவியலுக்குக் காவிச்சாயம் பூச முயல்கிறார்கள். அறிவியல் காவிகளுக்குள் அடங்காது என்பது அவர்களுக்குத் தெரியாது.

தந்தை பெரியார் சொல்கிறார், "பள்ளிக் கூடத்தில் சிறிது நேரத்தை ஒதுக்கிப் பகுத்தறிவைச் சொல்லித் தரவேண்டும்" என்று! ●

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## காஷ்மீர் தேர்தல்



தொண்ணூறு தொகுதிகளைக் கொண்ட ஜம்மு-காஷ்மீர் சட்டமன்றத் தேர்தல் செப்டம்பர் 18, மற்றும் 25, அக்டோபர் 1 ஆகிய தேதிகளில் 3 கட்டங்களாக வாக்குப் பதிவை நடத்தி, அக்டோபர் 4ஆம் தேதி வாக்குகள் எண்ணப்பட இருக்கின்றன.

மெகபூபா முப்தியின் மக்கள் ஜனநாயகக் கட்சி, பரூக் அப்துல்லாவின் தேசிய மாநாடு கட்சி, காங்கிரஸ், பா.ஜ.க உள்ளிட்ட கட்சிகள் தேர்தலை சந்திக்கின்றன. பா.ஜ.கவில் இருந்து மோடி, அமித்ஷா, ராஜ்நாத்சிங், நட்டா, ஆதித்யநாத் உள்ளிட்ட 40 பேர்கள் தேர்தல் பிரச்சாரத்தில் இருக்கிறார்கள்.

ஜவகர்லால் நேரு, வல்லபாய் பட்டேல், ஷேக் அப்துல்லா, மீர்சா அலிபெய்க் இவர்களுடன் அன்றைய ஆர்.எஸ்.எஸ் கோல்வால்கரின் சிஷ்யரும், ஜனசங்க் கட்சித் தலைவருமான சியாமா பிரசாத் முகர்ஜியும் சேர்ந்து 1949 மே மாதம் முதல் அக்டோபர் வரை விவாதித்து எடுக்கப்பட்ட முடிவின்படி அரசியல் அமைப்புச் சட்டப்பிரிவு 370 ஐ அரசியல் நிர்ணய சபை 17-10-1949 அன்று ஏற்றுக் கொண்டது.

1947 முதல் 1950 வரை நேருவின் அமைச்சரவையில் இருந்த (ஆர்எஸ்எஸ் பிரதிநிதியான) முகர்ஜியும் சேர்ந்துதான் 370 ஆம் பிரிவை ஏற்றுப் பரிந்துரைத்தார்.

இப்பொழுது அதே ஆர்எஸ்எஸ் வழிவந்த மோடியும், அமித்ஷாவும் 370ஆம் பிரிவைத் திரும்பப் பெற்றுக் கொண்டு காஷ்மீரை 3 ஆகப் பிரித்து விட்டார்கள். ஆர்எஸ்எஸ் இரட்டை வேடம் இங்கே கலைந்துவிட்டது. ஜம்மு-காஷ்மீர் மக்களின் உரிமையை மீறிய இந்தச் செயலால் ஆறாக் கோபத்தில், துயரத்தில் இருக்கிறார்கள் அந்த மக்கள்.

அதனால் ஜம்மு-காஷ்மீரின் இந்தத் தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

நாமும் பார்ப்போம் தேர்தல் முடிவை, அக்டோபர் 4 அன்று!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## பெரியார் – வ.உ.சி பிறந்தநாள்




கடந்த 08.09.2024 அன்று கொளத்தூர் ஜவஹர் நகர் நூலக வாசகர் வட்டத்தின் சார்பாக நடைபெற்ற தந்தை பெரியார் – கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் ஆகிய தலைவர்களில் பிறந்த நாள் நிகழ்வில், திராவிடப் பள்ளி இணை ஒருங்கிணைப்பாளர் தோழர் வெற்றிச்செல்வன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். தோழர்கள் அ.இல. சிந்தா, ஜனனி கணேசன் ஆகியோரும் உரையாற்றினர்.

# ‘வெங்காயம்’ மூன்று நூல்கள் வெளியீடு
















'வெங்காயம் பதிப்பகம்' வெளியிடான கவிஞர் இராம. வைரமுத்துவின் "திராவிடம் வென்றது" கவிதை நூல், சொக்கலிங்கம் எழுதிய 'ஆணையங்களும் வரலாறும்' - 'பங்குச்சந்தை மோசடிகள்' ஆகிய மூன்று நூல்கள் காரைக்குடியில் 08.09.2024 அன்று வெளியிடப் பட்டன. வெளியீட்டு விழாவில் நூல்களை, திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார். பழனி சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி.செந்தில் குமார், வழக்கறிஞர் இரா.இராஜீவ் காந்தி ஆகியோர் நூல்களைப் பெற்றுக் கொண்டனர். வரவேற்புரை குமரன்தாஸ், ஏற்புரையை நூல் ஆசிரியர்கள், நன்றியுரையை தோழர் நவில் நிகழ்த்தினர்.







